[4th August 1966

அந்த அதிகாரபூர்வமான தகவலை இலங்கை அரசிடமிருந்து எதிர்பார்க்கிறீர்களா அல்லது இந்திய அரசு தூதுவர் அலுவலகத்தில் இருந்து எதிர்பார்க்கிறீர்களா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சக்கரை மன்றாடியார் : ஒரு குழுவை அனுப்பி என்ன நிலை என்று தெரிந்து கொள்ளலாம் என்ற முடிவில் அரசாங்கம் இருந்து கொண்டிருக்கிறது.

MR. SPEAKER : We cannot get any intimation from the Ceylon Government direct. It must come through the Central Government.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றிய உண்மை நிலை என்ன என்பதை இந்திய தூதராலயம் மூலம் அறிய முயற்சி எடுக்கப் பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சக்கரை மன்றாடியார் : தெரிந்து கொள்ளவேண்டுமென்றுதான் முயற்சி.

Handloom Weavers' Co-operative Societies

* 91. *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of Handloom Weavers' Co-operative Societies that have claimed rebate in Tiruttani taluk, Chingleput district for the year 1964–65 ;

(*b*) the number of societies among them that were granted rebate and the number disallowed rebate ; and

(*c*) the reasons for the disallowance ?

THE HON. SRI N. NALLASENAPATHI SAKKARAI MANRADIAR : (*a*) Twenty-six societies claimed rebate.

(*b*) (i) Thirteen were granted rebate.

(ii) Five were disallowed rebate. Eight are under investigation.

(*c*) The societies did not satisfy the conditions governing the grant of rebate.

மீன் வலைகள்.

* 92 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்ய மீனவர்களின் நைலான் நூல் வருடாந்திரத் தேவை அளவென்ன ?

(இ) அத் தேவை எவ்விதம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) 1,00,000 (ஒரு லட்சம்) கிலோ கிராம்.